
श्री:।।
श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ।।
श्रीमते श्रीलक्ष्मीनृसिंह दिव्यपादुकासेवक श्रीवणशठकोप श्री नारायणयतीन्द्रमहादेशिकाय नमः।।



# पाञ्चजन्यम् *Pāncajanyam*

**The In-House News Letter of Sri Ahobila Muth Educational Institutions**

**Vol: 1. Issue 4** **Tarana Masi (Feb-Mar 2005)**

***Call for Sri Vaishnava Guru-kula Summer Camp – Level 1***
***15th May 2005 to 4th June 2005.***

Refer to Vol: 1 Issue 4 or Sri Narasimha Priya Tarana Pankuni Issue for more details. For those who have responded to this call earlier, we are in the process of sending you further details.

***Admission Notification for the Academic Year 2005-2006***

1. 5-வருட **சிரோமணி** (சென்னை பல்கலைக்கழகம்) சிரோமணி 3-4 வது வருடங்களில் பாஞ்சராத்ராகம டிப்ளமோ படிக்கவும் வாய்ப்பு உண்டு.
2. **OSLC** - 6, 7, 8ம் வகுப்புகள் (தமிழக அரசு பாடதிட்டம்).
3. 7-வருட **க்ருஷ்ணயஜுர்வேதம்.**
4. 4000 **திவ்யப்ரபந்தம்** மற்றும் தேசிகப்ரபந்தம்.

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

The PRO, Sri Ahobila Muth Educational Institutions,
Maduranthakam 603 306,
Tel: 04115-253070/255213. Email: hh45hh@hotmail.com

***முக்கிய நிகழ்ச்சிகள்***

**நமது கல்விஸ்தாபனத்தின் 63வது ஆண்டு விழா.**

நமது கல்விஸ்தாபனத்தின் 63வது ஆண்டு விழா 27.2.05 அன்று கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நமது ப்ரார்த்தனையை ஏற்று ஸ்ரீமதழகியசிங்கர் பரமக்ருபையுடன், தனது திருமேனி அஸௌகர்யத்தையும் கணிசியாது முன்னதாகவே ஸ்ரீசன்னிதி ஆராதகரர்ஸ்வாமி மற்றும் கைங்கர்யபரர்கள், சிஷ்யர்களுடன் நேரில் எழுந்தருளி வார்ஷிகோத்ஸவத்தை வெகுசிறப்பாக நடத்தி வைத்து க்ருபையுடன் அநுக்ரஹித்தாயிற்று.

மாலை நான்கு மணிக்கு ப்ரார்த்தனா மண்டபத்தில் விழா தொடங்கியது. வேத வித்யார்த்திகள் சாந்திபாடத்தையும் பின்பு பள்ளி மாணவர்கள் இஞ்ஜிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரின் விஷயமான வைபவஸுதாவிலிருந்து சில ச்லோகங்களையும் படனம் செய்தார்கள். ஆஸ்தான வித்வான் தெய்யார் வங்கீபுரம் லக்ஷ்மீநரஸிம்ஹாச்சாரியார் ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்வாகத பத்திரத்தையும் பள்ளி தலைமை ஆசிரியர் Dr.ந.பத்ரி அவர்கள் ஆங்கிலத்தில் வரவேற்புரையையும் விண்ணப்பம் செய்தார்கள்.

கல்வி ஸ்தாபனத்தின் கௌரவச் செயலாளர் பிள்ளைபாக்கம் Dr.ஸ்ரீதராசாரியார் ஸ்வாமி நிர்வாகத்தின் ஆண்டறிக்கையில் நமது ஸ்தாபனத்தின் வரலாறு, லக்ஷ்யம், எதிர்கால திட்டங்கள் எல்லாவற்றையும் விளக்கினார். கல்லூரி பிரிவில் ப்ரின்ஸ்பால் ஸ்ரீமான் V.ராஜகோபால ஸ்வாமியும், வேதபிரிவில் ஸ்ரீ.உ.வே ஸ்ரீராம்பிரபு ஸ்வாமியும், ஸ்கூல்பிரிவில் ஹெட்மாஸ்டர் DR. N. பத்ரியும், ஹாஸ்டல் பிரிவில் தெய்யார் ஸ்ரீ.உ.வே. லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்வாமியும் அவரவர்களின் ஆண்டறிக்கைகளை வாசித்தார்கள்.

இவ்வருடம் சிறப்பு விருந்தினர்களாக ப்ரஸித்தர்களாயும் ஸ்ரீமதழகியசிங்கரிடம் அபரிமிதமான பக்திமான்களாயுமுள்ள பம்பாய் ஸ்ரீ. K.V.ரமணி மற்றும் நாட்டேரி ஸ்ரீ.M.பார்த்தசாரதி ஐயங்கார் ப்ரார்த்திக்கப்பட்டு எழுந்தருளியிருந்தார்கள். இக்கல்வி ஸ்தாபனத்தின் கௌரவ செயலர் டாக்டர் பிள்ளைபாக்கம் ஸ்ரீ.உ.வே ஸ்ரீதராசாரியர் இவர்களுக்கு பொன்னாடை போற்றி நினைவுப் பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

ஸ்ரீ. ரமணி தமது உரையில் ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளபடியே மதுராந்தகம் பாடசாலை, ந்ருஸிம்ஹ ப்ரியா, மாலோல ஸதஸ் இவையெல்லாம் நடைபெற்று வருகின்றன என்றும் இப்பாடசாலையின் வித்யார்த்தி என்பதில் பெருமைபடவேண்டும் என்றும், ஆசார்யனை ஆச்ரயித்து உய்யவேண்டும் என்றும், நாம் படித்த கல்வி ஸ்தாபனத்திற்க்கு நம்மால் முடிந்த உதவிகளை புரிதல் வேணடும் என்றும், இப்பாடசாலை வித்யார்த்தி என்பதில் பெருமைபடவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அடுத்ததாகச் சொற்பொழிவாற்றிய சிறப்பு விருந்தினர் நாட்டேரி ஸ்ரீ. M.பார்த்தசாரதி ஐயங்கார், மாணவர்கள் பிற்காலத்தில் வல்லவர்களாக திகழ எல்லா உதவிகளையும் செய்வதாக கூறினார். நன்கு படிக்கவேண்டுமென்கிற மாணவர்களுக்கு மேற்படிப்பிற்கான ஏற்பாடுகளை அவர் நடத்திவரும் கல்லூரியில் செய்து தருவதாகதாக கூறினார்.

சிறப்பு விருந்தினர்கள் பேச்சுப்பேட்டி, கட்டுரைப்போட்டி, போன்ற பல்வகை போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை அளித்தனர்.

ஸ்ரீமதழகியசிங்கர் தம் அநுக்ரஹ பாஷணத்தில் தாம் வித்யார்த்தி தசையில் இருந்தது தற்போது தமக்கு கண்முன்னே வருகிறதென்றும், இதே ப்ரார்த்தனா மண்டபத்தில் வடக்கு பக்கம் நான்காவது ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு தினசரி சிந்தனை செய்வது வழக்கம் என்றும், தமக்கு அத்யாபகர்கள் நன்கு போதித்த திறனையும், வைதிக ச்ரத்தையுடன் இருந்த காலத்தையும் பரக்கப்பேசி நினைவு கூர்ந்தார். மேலும் வித்யார்த்திகளுக்கு தனது ஆசீர்வாதங்களைச் சொல்லி அவர்கள் இந்த வயதில் கஷ்டப்பட்டு உழைத்து வித்யாப்யபஸம் செய்தால் பிற்காலத்தில் கட்டாயம் நல்ல ஸ்திதிக்கு வருவார்கள் என்று அகமகிழ்ந்து அநுக்ரஹித்தாயிற்று. ஓர் நல்ல கார்யம் செய்வது என்றால் பல தடைகள் வரும். ஆனால் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் அநுக்ரஹத்தால் மலை போல் வரும் கஷ்டங்கள் பனி போல் நீங்கி விடும் என்று அநுக்ரஹித்தார்.

ஸ்ரீ.உ.வே.புதுக்கோட்டை சேஷாத்ரியாச்சார் ஸ்வாமி இந்த கலாசாலைக்கு முதல்தாய் 42ம் பட்டம் அழகியசிங்கர் என்றும், இதத்தாய் இதாநீம் ஸ்ரீமதழகியசிங்கர் என்றும், ஸ்ரீமதழகியசிங்கருக்கு ஸதா ஸர்வகாலம் பாடசாலை சிந்தனையேதான் என்றும், இப்படிபட்ட ஆசார்யர்க்கு "ப்ரஹ்மவித்யா ப்ரதாநஸ்ய தேவைரபி" என்றதுபோல் ஆசார்யனுக்கு கைமாறு செய்யமுடியாது என்றும் கூறி கருதக்ஞதையை ஆவிஷ்காரம் செய்தார். மங்களச்லோகத்துடன் விழா இனிதே முடிவுற்றது.

**வைபவஸுதா போட்டி பரிசளிப்பு:** இஞ்ஜிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யசரிதத்தை விவரிக்கும் நூல் வைபவஸுதா. இதை இயற்றியவர் மஹாவிதவான் மஹா வையாகரணர் பாதூர் ஸரளகவி ராகவாச்சாரியர் ஸ்வாமி. சக்ரவர்த்தி திருமகன் தனது சரிதத்தை லவகுசர்கள் கானம் பண்ண தானே கேட்டு உகந்தது போல், இஞ்ஜிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் திவ்யசரிதம் ஸரளகவியால் இயற்றப்பட்டு மேற்படி ஸ்ரீமதழகிய சிங்கரால் கேட்டு ரஸிக்கப்பட்டதே இதற்கு பெருமை.

ஸ்ரீமதழகியசிங்கரின் அபிமானிகள் இப்படிப்பட்ட க்ரந்தத்தை மனப்பாடம் செய்யும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி உத்ஸாஹபடுத்தி வருகின்றனர். இவ்வருஷம் ஆண்டு விழாவின்போது பள்ளியில் மூன்று மாணவர்களும், சிரோமணி பிரிவில் மூன்று மாணவர்களுமாக மொத்தம் ரூ. 2000 பரிசை ஸ்ரீமதி கமலா ஜகன்னாதன் அளித்தார்.

**ஸ்ரீ பாஞ்சராத்ர தீக்ஷை:** நமது கல்வி ஸ்தாபனமும், திருப்பதியிலுள்ள ராஷ்ட்ரீய ஸம்ஸ்க்ருத வித்யாபீடமும் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் நம் கலாசாலையில் பாஞ்சராத்ராகம இரண்டுவருட டிப்ளமோ கல்வி அளிக்கப்படுகிறது. இதற்காக ஆஸ்தான வித்வான் ஸ்ரீ.உ.வே. தையார் வங்கீபுரம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார் ஸ்வாமி பாஞ்சராத்ராகம கௌரவ அத்யாபகராக நியமிக்கப்பட்டுள்ளார். பரீக்ஷைகள் எழுதி, வித்யார்த்திகள் "ஸ்ரீபாஞ்சராத்ராகம வித்வான்" என்று அரசாங்க சான்றிதழ் பெற்றாலும், வைதீக ரீதியில் கற்றுத் தேர்ந்து, வைதீகமான ஸம்ஸ்காரமும் பெற்றால் தான் ப்ரகாசிக்க முடியும் என்ற உயர்ந்த நோக்கோடு 27.2.05 அன்று ஸ்ரீமத் அழகியசிங்கர் கலாசாலைக்கு ஸாக்ஷாத்தாக எழுந்தருளி

அநுக்ரஹத்தோடு தேவப்பெருருமாள் சன்னிதி ஸ்ரீ.உ.வே.ராஜம் பட்டர் ஸ்வாமியால் தீக்ஷா உத்ஸவம் அநுக்ஞை, ம்ருத்ஸங்க்ரஹண பூர்வகம் யாகசாலை கார்ய க்ரமங்களையும் ஆரம்பித்துவைத்தாயிற்று. பிறகு மூன்று கால ஆராதனங்கள் க்ரமமாக நடைபெற்று மறுநாள் 28.2.2005 அன்று பூர்ணாஹுதி முடிவாக இருபது வித்யார்த்திகள் ஸ்ரீபாஞ்சராத்ர தீக்ஷை பெற்றனர். ஆஸ்தான வித்வான் ஸ்ரீ.உ.வே. புதுக்கோட்டை சேஷாத்ரியாச்சார் ஸ்வாமி வித்யார்த்திகளை அநுக்ரஹித்து பட்டர் ஸ்வாமிக்கு தன்ய வாதங்களைக் கூறினார். விசேஷமாக ததீயாராதனமும் நடந்தது. ஸ்ரீமத் அழகியசிங்கர் நியமனப்படி பட்டர் ஸ்வாமிக்கு ரூ. 4000மும் அவருடன் ஸஹாயத்தற்கு வந்திருந்தவருக்கு ரூ.1000மும் ஸம்பாவனையாகக் கொடுக்கப்பட்டது. பட்டர் ஸ்வாமியும் ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களாயும் படுவாயுமுள்ள வித்யார்திகளுக்கு ஏககாலத்தில் ப்ராசீனமுறையில் தீக்ஷை செய்துவைக்கும் பாக்யத்தைக் கொடுத்த ஸ்ரீமதழகியசிங்கருக்குத் தனது தன்யவாதங்களை பஹுப்ரகாரம் வெளியிட்டார். தீக்ஷைபெற்ற வித்யார்த்திகளுக்கு உரிய சான்றிதழ் வழங்கப்பட்டது. இம்மஹோத்ஸவத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் பாஞ்சராத்ராகம கௌரவ அத்யாபகர், மற்றும் PRO ஸ்ரீ. முரளிதரனும் அனைவரின் ஒத்திழைப்புடன் திறம்பட செய்து வைத்தனர்.

42ம் பட்டம் இஞ்ஜிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரின் காலத்தில் ஒன்பது ஸ்வாமிகளுக்கு தீக்ஷை செய்து வைத்தாயிற்று என்றும் தற்போது இஞ்ஜிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் ஆரம்பித்துவைத்த கலாசாலையில் வித்யார்த்தியாயிருந்து தற்போது 45ம் பட்டத்திலுள்ள ஸ்ரீமதழகியசிங்கர் மறுபடியும் தீக்ஷை செய்து வைத்ததென்பது சரித்திரம் திரும்பகிறது (history repeats) என்னும் பழமொழிக்கேற்பவுள்ளது என்று அங்குள்ள சிலர் நினைவு கூர்ந்தனர்.

**சிறப்புச் சொற்பொழிவு**: இக்கல்வியாண்டிற்கான சிறப்பு சொற்பொழிவு தொடர் (Extramural Lecture Series) 22.2.05ல் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் Dr.N.பத்ரீ அனைவரையும் வரவேற்றார்.

ஸ்ரீமதி சித்ரலேகா குருமூர்த்தி, மத்திய கல்வி நிறுவனத்தின் துணை இயக்குனர் (Asst. Commissioner-Southern Region, CBSE) தனது உரையில், ஸம்ஸ்க்ருதம் புராதன மொழி என்றும், ஸம்ஸ்க்ருதமே நமக்கு நல்ல எண்ணங்களை வகுப்பதும், மேலும் எல்லா துறைகளுக்கும் உதவக்கூடிய நூல்கள், ஆய்வுகள் எல்லாம் ஸம்ஸ்க்ருதத்தில் உள்ளன என்றும் விவரித்தார். நம் ஸம்ஸ்க்ருத ஆசிரியர்கள் மூலம் அவர்களது CBSE பள்ளிகளில் ஸம்ஸ்க்ருத ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்க தான் ஏற்பாடு செய்யப்போவதாயும் அறிவித்தார். பாரததேசத்தின் ப்ராசீன குருகுல கல்விபோதனாமுறை இங்கு போற்றிப் பாதுகாப்பதைக் கண்டு வியப்படைந்து மிகவும் பாராட்டினார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த Dr.வாசுதேவாச்சார், Professor, New Castle University, தமது உரையை ஸம்ஸ்க்ருதத்திலும் நிகழ்த்தினார். நமது வேதம், இதிஹாஸங்கள், புராணங்கள் இவற்றின் சிறப்பை ஸம்ஸ்க்ருதத்தில் எடுத்துரைத்தார். அவர், மேலை நாடுகளில் அவர்களின் கலாச்சாரம் மாறிக்கொண்டேயிருந்த போதிலும், நமது இந்திய கலாச்சாரம் மட்டும் அப்படியே நிலைத்து இருப்பதற்க்கு எல்லாவற்றிற்கும் ஆதாரமாக வேத மிருப்பதொன்றே காரணம் என்றும், ஸம்ஸ்க்ருதம் பயிலும் மாணவர்களை தான் மிகவும் பாராட்டுவதாகவும், ஆங்கில மொழியையும் கட்டாயம் நன்கு கற்று கொள்ளவேண்டும் என்றும் ஆங்கிலம் மூலம் ஸம்ஸ்க்ருதத்தின் சிறப்புக்களை மற்றவர்களுக்கும், வெளிநாட்டினருக்கும் நன்கு புரிய வைக்க முடியும் என்று கூறினார்.

ஸ்ரீ. திருநாவுகரசு, கல்வி அதிகாரி, மத்திய கல்வி நிறுவனர் (Education Officer, CBSE) தனது உரையில் குருகுல முறையில் நடைபெற்று வரும் இந்த ஸ்தாபனத்தின் பணி மிகவும் பாராட்டத் தக்கது என்றும், மாணவர்கள் தங்களது அறிவை நன்கு பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்றும், மொழித் திறன் அவசியம் என்றும் அதன் மூலம்தான் நமது கருத்துக்களை தெளிவாக பிறருக்கும் அறிவிக்க முடியும் என்றார்.

இறுதியில் இக்கல்வி ஸ்தாபனத்தின் கௌரவ செயலர் டாக்டர் பிள்ளைபாக்கம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீதராசாரியர் நன்றியுரை கூறி வந்துள்ள விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி கௌரவித்தார். ஆக இப்படி, நடக்கும் கல்வியாண்டின் கடைசி சிறப்புச் சொற்பொழிவு இனிதே முடிந்தது.

**பெற்றோர் ஆசிரியர் கூட்டம்** 27.2.05 மற்றும் 27.3.2005 தேதிகளில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பத்தாம் வகுப்பு மாணவர்களது திருப்புதல் தேர்வு மதிப்பெண்களை ஆய்வு செய்து கலந்து உரையாடினார்கள். ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாணவர்களை மேன் மேலும் உத்ஸாஹப்படுத்தி பேசினர். மாணவர்களும் தாங்கள் மேலும் நன்றாக படித்து அரசு தேர்வில் நல்ல மதிப்பெண்களை பெற்று முழுதேர்ச்சி அடைவதாக உறுதியளித்த பின் கூட்டம் முடிந்தது.

## Annuity Patronage Scheme (I.T. 80-G)

கடந்த 63வருடங்களாக பல இன்னல்களையும் கடந்து ஸ்ரீ அஹோபிலமடம் கல்வி ஸ்தாபனத்தை ஸ்ரீமதழகியசிங்கர்கள் தங்களுடைய சிஷ்யர்கள், ஆஸ்திகர்கள் மற்றும் அபிமானிகளைக் கொண்டு நிர்வஹித்து வருகின்றனர். இதற்காக காலத்திற்கு ஏற்றாற்போல் த்ரவ்யத்தை சம்பாதிப்பதற்குண்டான வழிகளையும், நிர்வாஹ திட்டங்களையும் மாற்றியமைப்பதென்பது லோகவ்யவஸ்தை. இதற்காக ஸ்ரீமதழகியசிங்கர் ஷ திட்டத்தை வெளியிட்டாகியிருக்கிறபடி. இதன்படி ஸ்ரீ அஹோபிலமடம் கல்வி ஸ்தாபனத்தின் வளர்ச்சியில் த்வரை உடைய சிஷ்யர்கள், ஆஸ்திகர்கள் மற்றும் அபிமானிகளை மூலபூதர்களாக நியமித்து அவர்களிடமிருந்து ப்ரதிவருடம் ரூ. 2500 பெறப்படுகிறது (அல்லது ரூ. 30,000 மூலதனம்).

இத்திட்டத்தில் தற்போது வரை கீழ்கண்ட மஹநீயர்கள் ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனப்படி ரூபாய். 2,500 கொடுத்து உபகரித்துள்ளனர். (*List continues from the pre*vious issue).

U.S.A: Indira Sampath, Ranjini Mukund. Chennai: K.Srinivasan, V.Hari, R.Bashyam, Baby Achala, P.N.Muralidharan. Bangalore: Mani Vedanta Desikan, K.Rajagopalan, Suresh Narayanan, Vivek Raghavan, S.Rama Swami, R.Srinivasan. Eluru (AP): B.R.Santhnam.

## இதர நன்கொடைகள் (I.T. 80-G)

Bangalore: S Sangeetha Rs. 501.00, S Bijoy Anand, Rs. 501.00, S N Prasad, Rs. 1,101.00. Nagapattinam: M S Venkatesan, Rs. 1,001.00, Chennai: P.S.V.Chari, Rs. 2,000.00, S Vijayaraghavan, Rs. 2,000.00. **Annadhanam Corpus:** Sudha Lakshmi (Chennai) - Rs. 25,000.00, Dr. Shashi Roy (UK) – Rs. 50,001.00. **Infrastructure Development:** Through J.S. Vasan (Bangalore) Rs. 2,00,000.00, Anand Kumar/Sundari Ramakrishnan – Rs. 50,000.00. **நித்யததீயாராதனம்**: M.S.K.Sundarrajan (Chennai) Rs. 5500.00, Ananda Kannan(Old Student) Rs. 750.00, R Rajagopalan (Chennai) Rs. 3500.00, V R Lakshmi Narasimhan (Sankrit Pundit) Rs. 2500.00, B Varadhan (Chennai) Rs. 1500.00, K S Raman(Chennai) Rs. 7500.00. **Endowment for Awards:** S. Sundara Rajan (Chennai) Rs. 18,000.00.

மேல்படி திட்டங்களில் சேரவிரும்புவோர் காசோலை/டிராப்ட் மூலமாக (payable at Chennai) **Sri Malolan Educational Trust** (**IT 80-G** Exemption Available) என்கிற பெயருக்கு The Hony. Secretary, Sri Ahobila Muth Educational Institutions Complex, Maduranthakam 603-306 என்கிற விலாஸத்தற்கு அனுப்பவும்.

**Sri Ahobila Muth, Chembur, Mumbai**

## Non Residential Summer Camp 2005

*An Initiative for wider participation in preserving the tradition*

**17th April 2005 – 29th May 2005 at a Mutually Convenient Time**
**Conducted by Sri Ahobila Muth Educational Institutions, Maduranthakam**

***Program 1:*** **Nityanusandhanam.** Objective: To memorize certain portions for Nityanusandhanam. ***Program 2:*** **Day-to-day Sanskrit.** Objective: To enrich Sanskrit vocabulary so as to encourage its usage. ***Program 3:*** **Ahnigam.** Objective: To institutionalize basic minimum anushtanam in the daily routines. ***Program 4:*** **Sanskrit Poetics.** Objective: To make people appreciate the richness in Sanskrit literature. Enrolment: Kindly contact The Manager, Sri Ahobila Muth, Chembur, Mumabi 400 071.

Issued by The Public Relations Officer, Sri Ahobila Muth Educational Institutions for the benefit of its target audience. We value your feedback/suggestions sent to our address or to our
Email: hh45hh@hotmail.com